**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 02 April-June 2024**

# அறிவுமதியின் வலி படைப்பில் சொல்லாட்சியும் மொழிநடையும்

**அ.இலக்கியா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அகராதியியல்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
ஆய்வு நெறியாளர்: **முனைவர்.வீரமணி**

## முன்னுரை

ஒரு படைப்பின் வெற்றி என்பது அதன் உட்கருவும் சிந்தனை வளமும் வாசகனைச் சென்றடைவதே ஆகும். அத்தகு வெற்றியை அடைய மிகவும் இன்றியமையாதது அப்படைப்பின் மொழிநடையும் சொல்லாட்சியும் ஆகும். எந்த ஒரு படைப்பாயினும் கல்லாருக்கும் கற்றாருக்கும் களிப்பரும் களிப்பாக அமைய வேண்டுமெனில் அதற்கு எளிய நடையினான சொல்லாட்சிகள் மிகவும் அவசியமானது. எனினும் அச்சொல்லாட்சி வாசகனின் மனத்தில் நெருடலை ஏற்படுத்த வல்லதாகவும் அமைவதே படைப்பின் சிறப்பினை உணர்த்தும். அவ்வகையில் கவிஞர் அறிவுமதி அவர்களின் படைப்புகளுள் ஒன்றான வலி என்னும் கவிதை நூலில் கையாளப்பட்டுள்ள மொழிநடையையும் கவி ஆழத்தையும் சொல்லாட்சிகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கவியின் கரு

ஒரு நூலின் தொடக்கத்தில் அணிந்துரை வழங்கப்படுவதே மரபு. கவிஞர் அறிவுமதியின் வலி என்னும் நூலின் தொடக்கத்தில் நெகிழ்வுரையும் வலியுரையும் உயிருரையும் ஆன்றோர்களால் தரப்பட்டுள்ளது. தமது எளிய எழுத்துகளால் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் ஆழமான வலியைக் கவிதை வடிவில் நம்முள் கடத்துகிறார் அறிவுமதி. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் முகாம்களில் மனதளவிலும் உடலளவிலும் ஏற்படும் வலிகளை மறக்கவொன்னாச் சொல்லாட்சிகளைக் கொண்டு செதுக்கியுள்ளார் கவிஞர் அறிவுமதி.

## இறப்பை விட கொடியது

பெரும்பாலும் இறப்பினை மனித இனம் வெறுக்கிறது. அனைத்தும் அனுபவித்துத் தொண்ணூற்றைக் கடந்த வயதினில் கூட யாரும் சாவிற்குத் துணிவதே இல்லை. மனித மனம் வாழ்வதிலேயே தம் கடைசி மூச்சு வரை போராடுகிறது. அவ்வாறு இருக்கையில்,

**"நடுக்கடலில்**
**இறந்திருந்தால்**

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**நாறும் பிணங்கள்,**
**இங்கோ நடைப்**
**பிணங்கள் "**

என்னும் கவிதை வழியாக இறப்பினை வரவேற்கும் அல்லது இறப்பினைத் தவறவிட்ட ஜீவன்களாக அகதி முகாம்களில் வாழ்பவர்கள் துன்பப்படுகிறார்கள் எனக் கவிஞர் கூறுகிறார்.

**பறவைகள் மனிதர்கள் அல்ல**

ஒரு பறவை தனது பசிக்காகவும் இருப்பிடத்திற்காகவும் ஒரு நாட்டினை விட்டு மற்றொரு நாட்டிற்கு வலசை போதல் இயல்பு. அதைப் போலவே இலங்கையில் இருந்தும் வேடந்தாங்களுக்குப் பறவைகள் வருகின்றன. ஆனால் மனிதர்கள் அளவிற்குப் பறவைகள் வேறுபாடு காட்டுவது இல்லை. அவற்றைப் பறவைகள் விரும்புவதும் இல்லை. ஆனால் மனிதர்களாகப் பிறந்ததால் மண்டபம் வேடந்தாங்களைப் போல் இருப்பதில்லை எனப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் கருதுகின்றனர். இதனைக் கவிஞர்,

**வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது**
**எங்கள் நாட்டுப் பறவைகள் வேடந்தாங்கல் வருவதற்கும்**
**நாங்கள் மண்டபம் வருவதற்கும்**

என்ற வரிகளால் குறிப்பிடுகிறார். பறவைகள் தங்கள் குஞ்சுகளை விட்டு அவை மட்டும் இடம்பெயர்ந்து செல்லாது. அவை இனமாகவே வலசை செல்லும். ஆனால் ஈழப் போரின் காரணமாக எத்தனையோ குடும்பங்கள் கல்லில் பட்ட கண்ணாடியாய் சிதறிப் போயின. ஒவ்வொரு உறவும் ஒவ்வொரு ஊர் சென்ற கதைகள் ஏராளம். தனது தந்தையின் இறப்புக்கான ஒப்பாரி, கைபேசியில் ஓலமிடும் கதைகளாக இருந்ததைக் கவிஞர் ,

**சற்றுமுன் செத்த அப்பாவுக்கான**
**அழுகுரல் கேட்கின்றன**
**கைபேசியில்**

என்ற கவிதை வரிகள் மூலம் எடுத்து இயம்புகிறார்.

**பரிதவிப்பில் விடப்பட்ட உயிரினங்கள்** தமது உயிரினைக் காக்கும் போராட்டத்தில் தாம் வளர்த்த செல்ல பிராணிகளை விட்டுப் பிரிந்த துயரம் அகலாது இன்னும் அழுது கொண்டே அலைகின்றன முகாம் மனிதர்களின் மனம்.

**தூங்கம் என்னை நள்ளிரவில் வந்து**

**பிறாண்டிப் பிறாண்டி எழுப்புகிறது**

**தூக்கி வர மறந்துபோன**

**என் வளர்ப்புப் பூனை**

பூனை, நாய் மட்டுமல்லாது மரங்களும் செடிகளும் மாரோடு அடித்து அழுவதாய் ஒவ்வொரு நாளும் எண்ணியே இறக்கிறார்கள் முகாம் மனிதர்கள் எனக் கவிஞர் கூறுகிறார்.

**குழந்தைச் சித்திரம்**

போபால் விஷவாயுக் கசிவு நிகழ்ந்த போது, ஒரு குழந்தையின் கண் அரிக்கப்பட்ட புகைப்படம் உலகினையே கவலையில் ஆழ்த்தியது. ஆனால், ஈழத்திலோ எத்தனை குழந்தைகள் எத்தனை கோலம் பூண்டனர் எனக் கூறினால் அவை எண்ணிலடங்கா. இதோ ஒரு குழந்தையின் பாகங்கள் குத்தப்பட்டு அல்ல குதறப்பட்டுக் கிடக்கிறது. உடல் முழுவதும் குருதியால் குளித்துச் சதைகளால் ஒட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்பதை

**பச்சிளங் குழந்தையை உடல்நெடுக**

**இப்படி உளியால் கொத்தியிருக்கிறார்களே**

**புத்தர் சிலைக்கு முயற்சி செய்திருப்பார்களோ**

என்ற கவலை தோய்ந்த வரிகளின் வழிக் கவிஞர் கூறுகிறார். இவ்வளவு வலி மிகுந்த கவிதைகள் நம் உடம்பினையும் வார்த்தைக் கத்தியால் ஊடுருவி உலுக்குகிறது.

**உறவு - மண்**

பிறப்பிடம் விட்டுத் தாய் மண்ணைப் பிரிந்து வந்தவர்களை வாழ வைப்பார்கள் என நம்பினார்கள் புலம்பெயர்ந்தவர்கள். ஆனால் சில சமயங்களில் ஏனோ நாம் மனிதத்தை மறந்து மரமாகச் சிந்திக்கிறோம். இப்போதும் வட மாநிலத்தவர்களைக் கண்டாலே பயந்து ஓடுவதும் அருவருப்பாகப் பார்ப்பதும் திருடனாகக் கருதுவதும் நம்மில் பலரிடம் உள்ள குணமாக மாறிவிட்டது. இதே நிலை நம் சொந்தங்களான புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் இருந்துள்ளது என்பதையும் அவற்றின் வலி தற்போதும் எரிந்து கொண்டே இருக்கின்றது என்பதை,

**அங்கே அவனா என்று கேட்டு அடித்தார்கள்**
**வலிக்கவில்லை!**
**இங்கே திருடனா என்று கேட்டு அடிக்கிறார்கள்**

**வலிக்கிறது!**

என்ற கவிதையின் மூலமாகவும்,

**அங்கே சிங்களத்தில் கெட்ட கெட்ட**
**வார்த்தைகளில் திட்டினார்கள் புரிந்தது**
**இங்கே!**
**தமிழில் கெட்ட கெட்ட வார்த்தைகளில் திட்டுகிறார்கள்**
**புரியவில்லை!**

என்ற கவிதையின் மூலமாகவும்,

**தவறியவர்கள் மீன்களுக்கு இரையானோம்**
**தப்பியவர்கள் ஏன்களுக்கு இரையானோம்**

என்று அறிவுமதி பதிவு செய்கிறார்.

## அகதிகள் முகாம்

ஆடம்பர வாழ்வினை எந்தப் புலம்பெயர்ந்தவர்களும் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் அத்தியாவசியம் மனிதர்களுக்குத் தேவையானது தான். அவர்களின் வசிப்பிடத்தின் அழகினை,

**கழிப்பிடம் மோசம்**
**வசிப்பிடம் மோசத்திலும் மோசம்**

என்று அவர்களிடத்திற்கே சென்று பதிவு செய்திருக்கிறார் கவிஞர்.

கொடையாளிகளான கடையெழு வள்ளல்கள் வாழ்ந்த ஊரில் ஒழுகும் வீட்டில் கூரை மேய அங்கங்கே விரிப்புகளும் அடைப்புகளும் வைத்து வாழும் புலம்பெயர்ந்தவர்களின் வறுமை வாழ்க்கையை

**மயிலுக்குப் போர்வை தந்தான் பேகன்**

**ஒழுகுகிறது அகதி முகாம்.**

எனப் பதிவு செய்திருக்கிறார் கவிஞர்.

## கொண்டாட்டங்கள்

ஒவ்வொரு குழந்தைக்கும் விழா என்பது குதூகலம் நிறைந்த நாளாக இருக்கும். அவரவர் வசதிக்கேற்ப ஏதோ ஒரு குதூகலம் குழந்தைகளுக்கு அவர்களது குடும்பத்தால் கொடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். அப்படி இருக்கையில் புலம்பெயர்ந்தவர்களின்

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

விழாக்கள் எவ்வளவு மன அழுத்தத்தைத் தரும் என்பதை அவர்கள் வார்த்தைகளால் கூறமுடியாதையும் கவிஞர் தனது சொல்லாட்சிகளால் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

**குழந்தையின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகிறோம்**
**கடந்த பிறந்தநாள் விழா படங்களைப் பார்த்து.**

என்ற வரிகள் வாசகரின் மனத்தில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளன. மேலும்,

அயல்நாட்டுப் பறவைகள் அச்சப்படக் கூடாது
என்பதற்காக,
தீபாவளிக்கு வெடி வெடிப்பதையே விட்டுவிட்ட ஊர்கள்
இங்கே இருப்பதாகக் கேள்விப்பட்டோம்.
எங்கள் குழந்தைகளுக்காகவும் இரக்கப் பட்டு
இதனைக் கடைப்பிடிப்பீர்களா?

என்ற வினா வடிவிலான கவிதை நமது மனத்தை நாணம் அடையச் செய்கிறது என்றால் அது மிகையாகாது.

## படிப்பு

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது நம் தமிழ் இலக்கியங்கள். ஆனால் நமது தமிழ் உறவுகள் அனைவருக்கும் கல்வி ஆரம்பத்தில் கிடைக்காமல் இருந்தது. பின் கல்வி தரப்பட்டாலும் பல நிபந்தனைகளைக் கொண்டதாய் இருந்தது. இன்றளவும் கூட ஈழத் தமிழர்களுக்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இவ்வாறு ஈழத் தமிழர்கள் பணிக்காக மட்டுமல்லாமல் பசிக்காகவும் படிப்புக்காகவும் ஏங்கி இறைஞ்சி இரந்து வாழ்கின்றனர் என்பது புலனாகிறது.

**தப்பித்து வந்த குழந்தைகளுக்குக்**
**குடிக்கப் பால் கிடைக்கிறது.**
**படிக்கத்தான் தமிழ் கிடைக்கவில்லை!**

என்னும் வரிகளும்,

**பள்ளிக்கூட பழக்கம்**
**ஆறுமணி கணக்கெடுப்பில் பொடியன் சொல்கிறான்**
**உள்ளேன் அய்யா**

என்ற வரிகளின் வழியாக ஈழத்தமிழர்களின் உணர்வுகளை நமக்குள் செலுத்துகிறார் கவிஞர் அறிவுமதி.

**கடற்பயணம்**

தமிழர்களின் ஐந்திணைகளில் ஒன்று நெய்தல் திணை. நெய்தல் பயணங்கள் பல வரலாற்று மாற்றங்களையும் நிகழ்த்தி இருக்கிறது. கடற்பயணங்கள் தற்போது மகிழ்வினைத் தரும் சுற்றுலாவாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், இக்கடல் பயணம் ஈழத் தமிழர்களுக்கு மறுவாழ்வுக்கான போராட்டமாய் அமைந்துள்ளது. சில நேரம் கருப்பு உடை அணிந்த தேவதைகளால் காக்கப்பட்டனர். பல நேரங்களில் குருதி வெள்ளம் உப்பு நீருடனும் கண்ணீருடனும் கலக்கப்பட்டது. ஈழத்தில் உள்ள குறிஞ்சி, முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமல்லாது நெய்தல் நிலத்து ஈழத் தமிழர்களுக்கும் இதேநிலை தான்.

**பஞ்சம் பிழைக்க மாநிலம் தாண்டிப் போகிறீர்கள்**
**உயிர் பிழைக்க கடல் தாண்டி வருகிறோம்.**

என்னும் கவிதை வரிகளும்,

**இராமேசுவரத்தில் எல்லாரும் குளித்துக் கரையேறுகிறார்கள்**
**நாங்கள் குதித்துக் கரையேறுகிறோம்.**

என்னும் கவிதை வரிகளும்,

**அவ்வப்போது எடுத்து அணைத்து**
**முத்தமிட்டுக் கொள்கிறோம்**
**கடற்படை வெளிச்சங்களிலிருந்து**
**எங்களைக் காப்பாற்றிய**
**அந்தக் கறுப்புச் சேலையை**

என்னும் கவிதை வரிகளும்,

**படகில் ஏறினோம்**
**படகுகளை விற்று**

என்னும் வரிகளும் கவிஞர் சொல்லாட்சித் திறனை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. வஞ்சகம் என்பது அரசியல் சித்தாந்தச் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டது. பல நேரங்களில் வஞ்சிக்கப்படுகிறார்கள் நம் ஈழத்து உறவுகள். அரசியல் ஆதாயங்களுக்காகவோ அரசியல் நியதிக்காகவோ அவர்களின் கதறல்கள் வஞ்சிக்கப்பட்டது உண்மை என்பதை எந்தத் தயக்கமும் இன்றி எளிய நடையில் மின்னல் ஒளிகளாய் பரப்பிச் செல்கிறார் கவிஞர். பல சிறிய குடிகளின் கதறல் கேட்காத இடத்தில் பெரிய விலங்கின் குரல் கேட்கப்படுவது எளிதானது. கரையேறி வந்து விட்டாலும் சிறையில் இருப்பதாகவே உணர முடிந்ததாக எண்ணினர் புலம்பெயர்ந்த தமிழர்கள். எந்த இனத்திலும் அதிகாரம் மிக்கவர்களுக்கு

அனைத்து வசதிகளும் எளிதாகவே கிடைத்து விடும். வாழ்க்கைப் போராட்டத்திற்காக மண்டபம் கிடைப்பது பெரிதாக இருக்கும் நிலையில் ஆள்பவர்களுக்கோ ஆடம்பரம் மாளிகை எளிதாகக் கிடைப்பதாய் கவிஞர் தன் மொழிநடையாளும் சொல்லாட்சிகளாலும் பதிவு செய்துள்ளார்.

**ஆயிரமாயிரம் எறும்புகளின் கதறல்**

**யாருக்கும் கேட்பதில்லை!**

**ஒற்றை யானையின் ஓலம்**

**ஊரெல்லாம் கேட்கிறது!**

என்னும் கவிதை வரிகளும்,

**தமிழில்தான் விசாரித்தார்கள்**

**தமிழர்களாய் இல்லை.**

என்னும் கவிதை வரிகளும்,

**நுணா மரத்துக் கிளைகளிலும்**

**தூங்க கோழிகளுக்கு உண்டு அனுமதி!**

**ஆறு மணிக்குள் நாங்கள் கூடடைய வேண்டும்!**

என்னும் கவிதை வரிகளும்,

**அவர்களுக்கு விருந்தினர் மாளிகை**

**எங்களுக்கு அகதி முகாம்**

என்னும் கவிதை வரிகளும் ஈழத்தமிழர்கள் நிலையைப் படம்பிடித்துக் காட்டும் சொல்லாட்சிகளாக அமைந்துள்ளன.

**நிலையாமை**

சங்க அக இலக்கிய நிலையாமை தலைவிக்காகத் தலைவன் ஏங்குவதும் தலைவனுக்காகத் தலைவி ஏங்குவதுமாகும். ஆனால் புலம்பெயர்ந்தவர்களின் நிலையாமை என்பது உறவுகளின் மரணத்தின் வலியால் கசிந்து கொண்டிருக்கும் வலிகளாக உள்ளது.

**அடக்கம் செய்யாமல் அய்ந்து நாட்கள்**

**வைத்திருந்தும்**

**அம்மாவின் முகத்தைக் கடைசியாய்ப் பார்க்க வாய்த்தது**

**கனடாவில் இருக்கும் மூத்த மகளுக்கு**

**வாய்க்கவே இல்லை**

**இங்கிருக்கும் இளைய மகளுக்கு!**

என்னும் கவிதை வரிகளும்,

**ஆழிப் பேரலைகளும்**

**எங்கள் பெண்களை வீடு புகுந்து இழுத்துப்போய்**

**கொல்லத்தான் செய்தன**

**ஆனாலும்**

என்னும் கவிதை வரிகளும்,

**கிழக்கிலிருந்துதான் வந்தது நிலா**

**நல்லவேளை அகதி என்ற பெயரிலிருந்து**

**அது தப்பிவிட்டது.**

என்னும் கவிதை வரிகளும் அவரது சொல்லாட்சித் திறன் மட்டுமல்லாது மொழி நடைத் திறத்தையும் நமக்குப் பறைசாற்று விதமாக அமைந்துள்ளன.

## முடிவுரை

தமிழரிடம் இலக்கியம் பழமையை மட்டும் போற்றுவதோடு நின்றுவிடாமல் அவ்வபோது காலத்திற்கு ஏற்றார் போல் புதுமைகளைப் புகுத்திக் கொண்டு பயணிக்கக் கூடியது. அந்நோக்கிலே பிறப்பிக்கப்பட்டதே புதுக்கவிதைகள். மரபின் கட்டமைப்பிற்கான உணர்வுகளைச் சுருக்காமல் தம் உள்ளக் கருத்தை எளிதாக எவரும் அறியும் வண்ணம் செயல்படுத்தக்கூடியதே புதுக்கவிதை ஆகும். இதற்குச் சான்றாக அறிவுமதியின் வலி என்னும் நூலின் எளிய நடையும் கருத்தாழமும் இக்கட்டுரை வழி அறியப்படுகிறது. தனது எளிய நடையின் மூலம் ஓர் இனத்தின் அவலங்களைக் கவிதையின் மூலமாகப் பதிவு செய்திருக்கிறார் கவிஞர். உறவு, மனித பண்பு, வறுமை, கடற்பயணம், வஞ்சகம் எனப் பல கோணங்களில் தனது சொல்லாட்சிகளின் மூலம் வலிகளைப் பதிவு செய்திருக்கிறார் என்பது இக்கட்டுரையின் வழித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## துணைநின்ற நூல்

1. அறிவுமதி, வலி (கவிதைகள்), கவிதா வெளியீடு, முதற்பதிப்பு, சென்னை -2021.